Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 145 / 2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 4 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | டாக்டர். பிரபாகர் |
| Father's Name | : | தங்கவேலு |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 08.07.2025.

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு மருத்துவர் பணியிலிருந்து விடுவித்துக்கொண்டு, கனிஷ்கா குழந்தைகள் என்ற பெயரில் தனியாக மருத்துவமனை வைத்துள்ளேன். கடந்த 27.08.2020 ம் வருடம் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாலை சுமார் 05.05 மணிக்கு பணியிலிருந்தபோது, நாராயணன் என்பவரை வினோத் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது, அன்றைய தினமே சுமார் மதியம் 03.00 மணியளவில் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் தன்னை ரீப்பர் கட்டையாலும், கையாலும், காலாலும் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது இரண்டு தோள்பட்டையிலும், இடுப்பு, இடதுபுற மார்பு பகுதியில் வலி இருப்பதாக கூறினார்.

அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின்படி, நுண்கதிர் படம் மார்பு மற்றும் இடுப்பு பகுதிக்கு எடுக்கப்பட்டது. அதில் எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை. ஆகையால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரன காயம் என சான்றளித்தேன். **விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.3,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ரீப்பர் கட்டை, கையாலும், காலாலும் அடித்தாலும் மேட்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

காயச்சான்றிதழில் தொடை பகுதியிலும், முதுகு பகுதியிலும் காயம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக சாதாரணமாக அடிப்பதற்கும், ஓங்கி அடிப்பதற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். கன்னத்தில் ஓங்கி அடித்தால் கன்னப் பகுதியில் வீக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். கன்னப் பகுதியில் வீக்கமும், காயமும் இருந்ததா என்றால் இல்லை. இரண்டு தொடைகளிலும், முதுகிலும் மாறி மாறி அடித்தது என்றால் பலமுறை அடித்ததாக அர்த்தம் என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**